# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X

ARAN International e-Journal of Tamil Research



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்
Aran
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹ்ஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# *The popular ritual background in the worship of the villagers of the Perumpannaiyur, Simili and Puthukkudi village*

***K.Karthika***(Ref.No.:30112/Ph.D.K8/Tamil/FullTime/October 2016/Confirm./Dt:15.04.2019) *Research Scholar, Department of Tamil, Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)ORCiD:* https://orcid.org/0009-0004-5832-5139

***Dr. P.Senthilkumari, Research Advisor*** — *Associate Professor, Department of Tamil, Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)*

*ORCiD:* https://orcid.org/0009-0004-7939-4926

***Abstract***

*The rituals can be called rituals the processes that the human society has taken on life. These rituals are confident. These rituals, which are being practiced by the ninety -ninety, have been mixed together in the life of the folk. This article describes the people's ritual in the worship of the three villages in the Kudavasal region.*

***Keywords:*** *Habits, Intelligence, Laboratory, People's Work, People's Rituals, Baby Shower Ritual, Men's Contribution, Medical Consultation, Birth rituals, Sixteen Kumbing.*

## பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்

**க.கார்த்திகா** (Ref.No.:30112/Ph.D.K8/Tamil/Full Time/October 2016/Confirm./Dt:15.04.2019) *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ORCiD: https://orcid.org/0009-0004-5832-5139*

**முனைவர் ப.செந்தில்குமாரி,** *ஆய்வு நெறியாளர் - இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ORCiD: https://orcid.org/0009-0004-7939-4926*

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதச் சமூகம் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ள மேற்கொண்ட செயல்முறைகளை சடங்குகள் என்று சொல்லலாம். இச்சடங்குகள் நம்பிக்கைபாற்பட்டவை. தொன்றுதொட்டு*

கடைப்பிடிக்கப்பட்டு வரும் இச்சடங்குகள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஒன்றாகக் கலந்திருக்கிறது. அவ்வகையில் குடவாசல் வட்டாரத்தில் உள்ள மூன்று கிராமங்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்கு குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்:** பழக்கவழக்கம், உற்றுநோக்கல் முறை, ஆய்வுக்களம், மக்கட்பேறு வேண்டுதல், மக்கட்பேறு சடங்குகள், வளைகாப்புச் சடங்கு முறை செய்தல், ஆண்களின் பங்களிப்பு, மருத்துவச்சி ஆலோசனை, பிறப்புச் சடங்குகள், பதினாறு கும்பிடுதல்.

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் சடங்குகள் எப்பொழுது தோன்றின என்பது கணிக்க முடியாது என்கின்றனர் சமூகவியலாளர்கள். இருந்தாலும் மனித சமுதாயம் நம்பிக்கை வயப்பட்டு இயங்குவதைக் காண்கிறோம். தனிமனித நம்பிக்கை காலப்போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெறுகின்றது. மொழி போல சடங்குகளும் பழங்குடி மனிதர்களின் பரிணாம வளர்ச்சியில் தோன்றி இணைந்து கொண்டன. மனிதர்களின் வாழ்வியல் சடங்குகள், படிநிலைவளர்ச்சி கண்டு பண்பாட்டு நாகரித்தோடு தொடர்பு கொண்டன. மனிதர்களின் எண்ணங்களும் நம்பிக்கைகளும் சடங்குகளின் தோற்றத்திற்கான கூறுகள் ஆகும். தமிழ்நாட்டில் மாரியம்மன் வழிபாடு, கருப்பண்ணசாமி வழிபாடு ஆகியவை சிறுமரபினைச் சேர்ந்தவை என்று முத்துச்சண்முகனார் கூறுகின்றார். "பெரும்பாலும் கிராமத் தெய்வ வழிபாடுகள் *(Folk Religions)* சிறு நெறியில் அடங்கும்" என்று கூறப்படுகிறது (முத்துச்சண்முகம், ப.159). தமிழரின் நாகரிகம் உலகமெங்கும் பரவியதற்குக் காரணம் பாரம்பரிய சடங்கு முறைகள்தான். அந்த வகையில் தமிழர்களின் சடங்கு முறையில் முதன்மையாக போற்றப்படுவது மக்கட்பேறு சடங்கு முறை ஆகும். இச்சடங்கு முறை ஒரு பெண் தாய்மை அடைந்ததன் முதற்கொண்டு மகப்பேறு காலம் வரை நடத்தப் பெறுகிறது. ஒரு பெண்ணின் பெருமை, அவள் கற்பு நெறியுடன் தாய்மையடைந்து குழந்தையைப் பெற்றெடுக்கும் பொழுது பேசப்படுகிறது. இத்தகைய பிறப்புச் சடங்குப் பின்புலம் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**பழக்கம் வழக்கம் — விளக்கம்**

நாட்டுப்புறவியல் நாட்டுப்புற மக்களது நம்பிக்கை, பழக்க வழக்கங்களை ஆராய்கின்றது. நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு *(Common Denominator)* எனப்படும். இது "தனி மனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைப் **பழக்கம்** எனவும் குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது **வழக்கம்** எனவும் சமூகவியலாளர்கள் *(Sociologists)* கூறுகின்றனர். இதனையே தனிமனிதன் ஒருவன் பழகிப்போன மொழியில் திரும்பத் திரும்பச் செய்து வரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து செய்கின்றபோது அது வழக்கம் ஆகிறது எனலாம். இவற்றையெல்லாம் உற்றுநோக்கும் போது பழக்கம் என்பது

தனிமனிதனைச் சார்ந்த தொடக்கநிலை என்றும், வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடர்நிலை என்றும் கூறலாம்" (சு.சக்திவேல், ப.276) என்பர். இக்கருத்தையே, W.G.Sumner என்னும் மேலைநாட்டறிஞர் குறிப்பிடுவதனை வாழ்வியற் களஞ்சியம் (தொ.15, ப.571) பின்வருமாறு விளக்குகிறது. "ஒரு தனிமனிதனிடத்தில் அது பழக்கத்தையும், ஒரு குழுவினிடத்தில் வழக்கத்தையும் தோற்றுவிக்கிறது என்கிறார். ஆக, பழக்கத்தைப் போலவே, வழக்கமும் அமைகிறது. வேறு வகையில் சொன்னால் ஒட்டு மொத்தமாகத் தனி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட செயலை ஒரே ஒழுங்கு முறையில் செய்து வரும்பொழுது அது குழுவின் பொதுச் செயலாக அமைந்து வழக்கம் ஆகிறது" என்பது அது. ஆக நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் என்று கூறலாம்.

**உற்றுநோக்கல் முறை (Observation method)**

கள ஆய்வில் தரவுகள் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆய்வு முறைகளில் முக்கியமானவை மூன்று. அவை,

1. வினாப்பட்டியல் (Questionnaires)
2. உற்றுநோக்கல் (Observation)
3. நேர்முகப்பேட்டி (Interviews)

எனும் மூன்று ஆய்வு முறைகளைக் குறித்தும், அவை மூலம் பெறப்படும் தரவுகளின் தன்மை, தரம் குறித்தும் அத்தரவுகளைச் சமூகவியல் ஆய்வில் பயன்படுத்துவதற்கான காரணங்கள் குறித்தும் அமைவது" என்று மேலைநாட்டினர் விளக்கியதனைத் ம.வேலுசாமி தம் "சிறுதெய்வ ஆய்வில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறையியல்" என்னும் கட்டுரையில் சுட்டிக்காட்டி விளக்குகிறார் (மேற்கோள்: ஆறு.இராமநாதன், ப.248). இவ்ஆய்வுக்கட்டுரைக்கு தரவுகள் உற்று நோக்கல் முறை பின்பற்றப்பட்டுள்ளது.

**ஆய்வுக்களம்**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரத்தில் 49 வருவாய் கிராமங்கள் உள்ளன. அவற்றிலிருந்து பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி ஆகிய மூன்று கிராமங்கள் மட்டும் ஆய்வுக்களமாகக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி 3 கிராமங்களும் ஆய்வாளர் வசிக்கும் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளதால் தகவலாளர்களிடம் நேரில் சென்று தரவுகள் திரட்டுவதற்குச் சுலபமாக இருந்தது.

**மக்கட்பேறு வேண்டுதல்**

கிராமப்புற மக்களின் வழிபாட்டு நோக்கங்கள் அனைத்துமே தங்கள் துன்பங்கள் நீங்கி உலக இன்பங்களைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர். குடவாசல் வட்டாரத்தில் ஆய்வுக்களங்களாக எடுத்துக் கொண்ட பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி ஆகிய கிராம மக்களில் பெரும்பான்மையோர் தாங்கள் வழிபடும் மாரியம்மனிடம் குழந்தை

வரம் வேண்டி "நீங்கள் இன்னது செய்தால் நான் இது செய்கிறேன்" என்று கூறுவதுபோல் வேண்டுகின்றனர். இவ்வட்டாரத்தில் உள்ள மக்கள் தம் பொருளாதார வசதிக்கேற்ப ஆடு, பசு மற்றும் கன்று, கோழி போன்ற உயிர்ப் பொருட்களைக் குழந்தைப் பெற்ற பின்னர் வழங்கி தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.

இந்த வேண்டுதல்களையே நாட்டுப்புறவியல் அறிஞர் ஆறு.இராமநாதன் தன் ஆய்வில் கண்டறிந்து முடிபுகளாக ஒரு சில வேண்டுதல்களைக் குறிப்பிடுகிறார். அவை வருமாறு:

1. நல்ல கணவன்/மனைவி கிடைத்து விரைவில் மணமாக வேண்டும்
2. குழந்தை பாக்கியம் வேண்டும்
3. ஆண் குழந்தை வேண்டும்
4. மருத்துவமனை செல்லாமல் வீட்டிலேயே சுகப்பிரசவம் நடக்க வேண்டும்
5. மகளுக்கு வேலை கிடைக்க வேண்டும்
6. தன் பிள்ளைக்கு நல்ல புத்தி தர வேண்டும்
7. பள்ளித் தேர்வில் வெற்றி பெற வேண்டும்

என்பன போன்ற வேண்டுதல்களைச் செய்கின்றனர் என்கிறார் (ப.308).

**மக்கட்பேறு சடங்குகள்**

**முதல் தகவல் தெரிவித்தல்**

ஒரு பெண் தாய்மையடைந்த செய்தியினை முதலில் அப்பெண்ணின் தாய் வீட்டாருக்குத் தெரியப்படுத்தும் வழக்கம் பின்பற்றப்படுகிறது. அச்செய்தியினைக் கேட்ட தாய், தந்தை மற்றும் உறவினர்கள் மகிழ்ச்சியடைந்து தாய்மையடைந்த பெண்ணை நேரில் வந்து பார்த்துவிட்டுச் செல்வர். தன் மகளை காண வரும்போது இனிப்புப் பொருட்கள், பழங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்து தாய்மையடைந்த பெண்ணுக்குக் கொடுப்பர். தன் மகள் தாயாகி விட்டாள் என்பதை நேரில் உறுதி செய்து கொண்டு மகளுக்குத் தேவையான நல் ஆலோசனைகள் கூறிவிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றனர்.

**தாய்மையின் அறிகுறி**

"தாய்மையடைந்த பெண் முதல் நான்கு மாதங்கள் தன் கணவர் வீட்டில் இருப்பாள். அப்பெண்ணிற்குக் கணவன் மற்றும் அவருடைய உறவினர்கள் தேவையானவற்றை அன்புடன் செய்து தருவார்கள். காரணம் வம்ச விருத்தியை மனித சமுதாயம் விரும்புவதே தங்கள் வாரிசு நல்ல ஆரோக்கியத்துடனும் கூர்ந்த அறிவுடனும் விளங்க வேண்டும் என்பதே. ஏனெனில் தாய்மையுற்ற பெண்ணிற்கு முதல் மூன்று (அ) நான்கு மாதங்கள் வரை வாந்தி, மயக்கம் போன்றவை ஏற்படும். இது தாய்மையுற்றதன் பரிணாம வளர்ச்சியின் அறிகுறி என்பர். இது பொதுவாகப் பெரும்பான்மையான கருவுற்றப் பெண்களுக்கு ஏற்படுவது இயல்பு.

குழந்தையானது ஆரோக்கியமாக வளர ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகளும் பழங்களும் கொடுப்பார்கள்.

> "ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற பழமொழிக்கேற்ப கருவுற்ற தன் மனைவியை கணவனானவன் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்வான்"

என்று பெரும்பண்ணையூரைச் சேர்ந்த புஷ்பராணி கூறுகிறார்.

**ஐந்தாம் மாதம் மருந்து**

தாய்மையடைந்தப் பெண்ணிற்கு ஐந்தாம் மாதம் "மருந்து கொடுக்கும் வழக்கம்" தமிழகத்தில் தொன்றுதொட்டு பழக்கத்தில் இருந்து வருகிறது. பெண்ணின் தாய்வீட்டில் நல்ல நாள் பார்த்து ஐந்தாம் மாதம் அப்பெண்ணிற்கு மருந்து கொடுக்க ஒருசில உறவினர்களுடன் (ஒத்தைப்படை எண்ணிக்கையில்) வந்து மருந்து கொடுப்பது வழக்கம். இந்த சடங்கு முறைப்பற்றி,

> "வெற்றிலையுடன் குங்குமப்பூ வைத்து மடித்து வைத்துக் கொள்வர். கருவுற்ற பெண்ணை குளிக்க வைத்து விட்டு, புத்தாடை உடுத்தக் கூடாது என்பதால் அந்தப் புது ஆடையை அப்பெண்ணிற்கு முறையுள்ளவர்கள் உடுத்திக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் ஆடையை உடுத்தச் சொல்லி சாமி அறைக்கு முன்பு அமரச் செய்வர். மடித்து வைத்திருக்கும் மருந்தினை வெற்றிலை, சீவல், பூ, குங்குமம், பழம் இவற்றோடு வைத்து வணங்கி, மூத்த சுமங்கலிப் பெண்கள் மூன்று பேர்களின் கையால் கொடுப்பர். தம் குலதெய்வத்தை வேண்டிக் கொடுக்கப்படும் இம்மருந்து வயிற்றில் வளரும் சிசுவுக்காகக் கொடுக்கப்படும் முதல் மருந்து ஆகும். காலையில் வெறும் வயிற்றில் இம்மருந்து கொடுக்கப்படும். இச்சடங்கிற்குமுன் உணவு உண்ணக் கூடாது என்பது வழக்கம். ஐந்தாம் மாதம் மருந்து கொடுத்தப்பிறகு தாய்மை அடைந்த அப்பெண் தன் தாய் வீட்டில் தங்கச்சொல்லி பத்து நாட்களுக்குப் பின்னர் தன் கணவன் வீட்டிற்கு அழைத்து வருவார்கள்"

என்று சிமிழியைச் சேர்ந்த செங்கம்மாள் என்பவர் கூறுகிறார். மேலும், ஒரு சில குழுவினர் வெற்றிலை குங்குமப்பூவிற்குப் பதிலாகக் கறிவேப்பிலையுடன் ஒரு கல் உப்பு வைத்து துவையல் போன்று அரைத்துக் கொடுப்பர். பெரும்பாலும், சமூகத்தில் பொருளாரத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் சமூகத்தைச் சார்ந்த மக்களிடையே இவ்வழக்கம் உள்ளது என்றும் கூறுகின்றார்.

**ஏழாம் மாதம் மருந்து**

மீண்டும், ஏழாவது மாதம் அப்பெண்ணைப் பிறந்தகத்திற்கு அழைத்துச் சென்று ஏழாம் மாதம் மருந்து கொடுக்கும் வழக்கம் நிலவுகிறது. சிலர் ஐந்தாம் மாதம் மருந்து போலவே கொடுப்பர். இதனை,

> "ஒரு சிலர் இதிலிருந்து வேறுபட்டு பூவரசம் பட்டையையும், மூக்கரட்டான் கிழங்கையும் உரலில் போட்டு இடித்து நன்றாகச் சாறு பிழிந்து வடிகட்டிச் சுத்தமான பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு, காலையில் தாய்மையடைந்த பெண்ணைச் சாமி அறைக்கு முன்பு அமரச்செய்து "தாயும் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு மருந்து கொடுப்பர்"

என்று புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த கோகிலா கூறுகிறார்.

**பத்தியம் முரித்தல்**

மூன்று நாளும் பெண் பத்தியம் இருக்க வேண்டும். "அப்பொழுது அப்பெண்ணிற்கு உப்பு இல்லாத கஞ்சியும் பருப்புத் துவையலும் உணவாகச் சாப்பிட வேண்டும். நான்காவது நாள் பத்தியம் முரிப்பதற்காக உப்பு, சங்கு இலை இரண்டையும் சோற்றில் சேர்த்து சாப்பிட வேண்டும். இந்த நிகழ்வு முடிந்த பிறகு கருவுற்றிருக்கும் அப்பெண் கணவன் வீட்டில் வந்து இருப்பாள். இந்த நிகழ்வு குழுவுக்கு குழு மாறுபடும் என்று புதுக்குடியைச் சேர்ந்த கருப்பாயி கூறுகிறார்."

**வளைகாப்பு**

கருவுற்ற பெண்ணிற்கு ஏழாம் மாதம் (அ) ஒன்பதாம் மாதம் வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெறும். இச்சடங்கை "வளைகாப்பு" (அ) "சீமந்தம்" என்று கூறுவர். "தாய்மையடைந்த பெண்ணுக்கு வளைகாப்பு இடுவதற்காக நல்ல நாள் பார்த்து இரு வீட்டார்களும் சேர்ந்து கலந்து பேசி முடிவெடுப்பர். அந்தக் குறிப்பிட்ட நாளில் பத்திரிக்கை மூலமோ/புலனம் (Whatsapp) அல்லது நேரில் சென்றோ உற்றார் உறவினர்களுக்குக் தகவல் சொல்லி வாழ்த்துவதற்கு அழைப்பு விடுப்பர். இந்நிகழ்விற்குப் பெண் பிறந்தகத்திலிருந்து சுற்றத்தாருடன் வரும்போது உடன் ஒன்பது வகையான சோறு, தட்டு பலகாரக் குடங்கள் எடுத்து வருவர். காலையில் பெண்ணையும், மாப்பிள்ளையையும் குளிக்கச் செய்து, பெண்ணை அலங்காரம் செய்து, பந்தலில் பலர் மத்தியில் நாற்காலியில் அமர வைப்பார்கள். மாப்பிள்ளை புத்தாடையுடன் பந்தலில் இருப்பார். இந்நிகழ்வு பொதுவாகப் பெண் புகுந்த வீட்டில் நடைபெறுவது வழக்கம்."

**வளைகாப்புச் சடங்கு முறை செய்தல்**

கருவுற்ற (அப்)பெண் நாற்காலியில் அமர்ந்த பிறகு முதலில் காப்பு என்று சொல்லப்படும் வேப்பங்காப்பினை கைகளுக்கு ஒன்றாக அணிவிப்பர். அதன்பிறகு ஒன்பது (எண்ணிக்கையில்) கண்ணாடி வளையல்களை ஒவ்வொரு கையிலும் அணிவிப்பர். பெண்ணின் கன்னங்களில் சந்தனம் பூசி மாலை அணிவிப்பர். அந்த நிகழ்ச்சிக்கு வந்த உற்றார் உறவினர்களான

பெண்களுக்குச் சிறிய சில்வர் தட்டு ஒன்றில் வெற்றிலைப்பாக்கு, சுவீட், சர்க்கரை கலந்த பச்சையரிசி, மஞ்சள், குங்குமம், சீப்பு, கண்ணாடி, வளையல் வைத்துக் கொடுக்கப்படும். பெண்ணை ஆரத்தி எடுத்து பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவார்கள். அனைவருக்கும் மாப்பிள்ளை வீட்டாரால் உணவு வழங்கப்படும். இந்த நிகழ்ச்சி இனிதே நிறைவுற பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். ஒருசில வசதிவாய்ப்பு மிகுந்த பெற்றோர் தம் பெண்ணிற்கு ஏழாவது மாதம் சீமந்தம் செய்து தாய் வீட்டிற்கு அழைத்து வந்து விடுவர்'' என்று பெரும்பண்ணையூரைச் சேர்ந்த ஜெயலெட்சுமி கூறுகிறார்.

**வளைகாப்பின் நோக்கம்**

வளைக்காப்பு என்பதற்கு ''முதல் ருப்பத்தின் ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் பெண்ணுக்கு வளையல் அணிவிக்கும் சடங்கு'' என்று பால்ஸ் அகராதி (ப.733) விளக்குகிறது. பெண் வயிற்றில் வளரும் சிசுவுக்கு ஏழாவது மாதத்திலேயே கேட்கும் திறன் ஏற்படுகிறது. அதன் காரணமாகத் ''தாயானவள் கண்ணாடி வளையல்களை அணிந்து கைகளை அங்கும் இங்கும் அசைக்கும் போது வளையல் சத்தம் கேட்கும். அது கை நரம்பு வழியாகக் கருவில் வளரும் குழந்தைக்குக் கேட்கும் திறனை அதிகரிக்கும். அதனால் பிறக்கும் குழந்தை செவிடாகும் வாய்ப்பு இல்லை என்பதை அறிந்து தாயானவள் மகிழ்வாக இருந்தால் பிறக்க போகும் குழந்தை எவ்வித குறையுமின்றி நல்ல முறையில் பிறக்கும் என்ற அடிப்படையில் இந்த வளைகாப்பு விழா கொண்டாடப்படுவதாகக் கள ஆய்வில் சிமிழியைச் சேர்ந்த மாலதி என்பவர் ''என் பாட்டி எனக்கு திருமணம் நிகழவிருக்கும் சந்தர்ப்பத்தில் ஓர் அரிய செய்தியாக வழிவழி நம் மக்களிடையே இது வழக்கமாக நடக்கும்'' (மாலதி, சிமிழி) என்று குறிப்பிட்டு மணமகிழ்ச்சியுடன் இச்செய்தியினை விளக்கினார்.

**ஆண்களின் பங்களிப்பு**

தன் மனைவி தாய்மையடைந்த நாளிலிருந்து குழந்தையைப் பெற்றெடுக்கும் நாள் வரை கணவன் தன் தலைமுடியை நீக்குவதில்லை. தாடி வளர்ப்பர். எந்த உயிர்களையும் கொல்லுவதில்லை. தம் செயல்பாடுகளில், உடலில் காயம் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளுவர். அவ்வாறு ஏதாவது நடந்தால் தன்னால் வளரும் குழந்தைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படும் என்று நம்புகின்றனர். ''ஒரு சிலர் ஏழாவது மாதத்தில் இருந்து தலைமுடியையும், தாடியையும் வெட்டுவதில்லை. குழந்தைப் பிறந்த மூன்றாவது நாள் தலைமுடியும், முகச்சவரம் செய்வதாகவும் புதுக்குடியைச் சேர்ந்த சிவசங்கம் கூறுகிறார்.''

**மருத்துவச்சி ஆலோசனை**

குழந்தை பிறப்பதற்கு ஒரு சில மணித்துளி நேரங்களுக்கு முன்னர் முன் தாய்மையடைந்த பெண்ணிற்கு ஏற்படும் வலியை ''இடுப்புவலி'' (அ) ''பிரசவ வலி'' என்று அழைப்பர். இவ்வலி

ஏற்பட்டவுடன் கிராமப்புற மருத்துவச்சியை அழைத்துவந்து ஆலோசனை பெறுவர். அவர் கூறும் ஆலோசனைப்படி வசதி வாய்ப்புள்ளோர் தனியார் மருத்துவமனையிலும், வசதி வாய்ப்பில்லாதோர் அரசு மருத்துவமனையிலும் பிரசவம் பார்த்துக் கொள்வர். இதற்கு ஆகும் செலவினங்கள் முழுவதும் பெண் பிறந்த வீட்டகத்தார் ஏற்றுக்கொள்வர். இது இன்றைய சனநாகரி அரசு ஆட்சிக் காலமாகையால் அரசு மருத்துவமனைகள் எல்லாவற்றிலும், இலவசப் பிரசவ வசதிகள் பெரிதும் துணை செய்கின்றன.

**பிறப்புச் சடங்குகள்**

பேறுகளுள் முக்கியமாகக் கருதப்படுவது மழலைச் செல்வமாகும். பண்டைத் தமிழர்கள் மக்கள் பேற்றை உயர்ந்ததாகவும், சிறப்புடையதாகவும் கருதினர். குழந்தை பிறப்பதற்கு முன்னும் பின்னும் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் பல்வேறு சடங்குகளை மேற்கொண்டுள்ளனர். சங்க இலக்கியத்தில், தலைச்சன் மக்கட்பேறு பெற்ற வீட்டில் ஐயவி என்ற நெய்யுடனே கலந்து ஒளிவீசுகின்ற வெண்சிறுகடுகு எனும் திரண்ட விதைகளை பேய்க்காப்பாக விளங்கும்படி தூவி வைத்திருப்பர். மக்கட்பேறு வாய்த்த தாய்க்கு நெய்ப்பூசி நீராட்டி சடங்குகள் மேற்கொண்டதை,

"கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக் குதவி
நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வனை யீன்றெனப் பெயர் பெயர்த்து"

என்று நற்றிணை (பா.370:2-5) எடுத்துரைக்கிறது. வள்ளுவர் தம் குறளில் ஒருவன் அடையக் கூடியவற்றுள் சிறந்ததாகக் கருதப்படுவது மக்கட்பேறு என்பதை,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற." (குறள்.61)

என்று குறிப்பிடுகிறார்.

**பிறப்பிற்குப் பின் நடைபெறும் சடங்குகள்**

குழந்தை பிறந்ததும் தொப்புள் கொடியை முடிச்சி போட்டு விடுவார்கள். ஏனெனில் காற்று உள்ளே போகாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் காற்றானது உள்ளே நுழைந்தால் குழந்தைக்கு உடல்நலக்கேடு வரும் என்பதற்காகக் கட்டப்படுகிறது. குழந்தை பிறந்ததும் தாய்க்குக் குளிர்ந்த நீர் கொடுக்கப்படுகிறது. வீட்டில் தனி அறையில் தாயையும் பிள்ளையையும் பாதுகாப்பாகத் தங்க வைப்பார்கள்.

**குளிப்பாட்டும் முறை**

குழந்தை பிறந்த நாளன்று குளிப்பாட்டுவார்கள். அதன்பிறகு மூன்றாம் நாள் தான் குளிப்பாட்டும் வழக்கம் உள்ளது. சுடுதண்ணீர் வைத்து அதில் நொச்சி, ஆரசுபதி இலை

முதலியவற்றைப் போட்டு, காய வைத்து தாயை நீராடச் செய்வார்கள். இடுப்புக்கு ஊற்றுதல் என்று இதனை கூறுவார்கள். தாயின் நலன் கருதி இவ்வாறு செய்யப்படுகிறது.

**மூன்றாம் நாள் மருந்து**

“குழந்தை பிறந்து மூன்று நாள் கழித்து தாய்க்கு நாட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. காயக்கருப்பட்டி, சுக்கு, அரையச்சாமான், சித்திரத்தை, பூண்டு, மிளகு இவற்றை அரைத்து குழந்தைப் பெற்ற தாயினை கிழக்கு முகமாக அமரச் செய்து குலதெய்வத்தை வேண்டிக் கொடுப்பார்கள். தாயும் சேயும் தனி அறையில் இருக்கும் வரை இந்தப் பத்திய மருந்து கொடுக்கப்படும். தாய்க்குப்பால் இல்லையென்றால் பால்சுறா, சீலா போன்ற மீன்கள் சமைத்துக் கொடுப்பர். தாயையும், சேயையும் தனி அறையில் வைத்து அவ்வீட்டின் கூரையில் வேப்பிலை சொருகப்படும் என்று களஆய்வின் பொழுது புதுக்குடியைச் சேர்ந்த பானுமதி கூறுகிறார்.”

**பதினாறு (பெயர் சூட்டுதல்) கும்பிடுதல் (பேச்சியம்மன்)**

குழந்தைப் பிறந்த பதினாறாம் நாள் சிறுதெய்வமான பேச்சியம்மனுக்கு சாமி கும்பிடும் பழக்கம் இன்றுவரை நாட்டுப்புற மக்களிடம் பின்பற்றப்பட்டு வருகிறது. அன்று குழந்தைக்கு பெயர் சூட்டப்படுகிறது. அன்று காலையில் தாயையும், சேயையும் குளிப்பாட்டி ஆடைகளை உடுத்தச் செய்வர். பின்பு குழந்தைக்கு கருமை, முகப்பவுடர் போட்டு வீட்டில் உள்ள முறத்தில் படுக்க வைத்து, வெளியில் சென்று சூரிய பகவானிடம் காட்டி வேண்டிக் கொள்வார்கள். இவ்வழக்கம் பிரிக்கப்படாத தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் பின்பற்றப்படுவதாக அறியமுடிகின்றது.

அன்று காலை குழந்தையின் கையில் வசம்பினை நூல் கயிற்றால் கட்டி விடுவர். அந்தக் குழந்தை கைகளை அசைத்து வாயில் வைத்துச் சுவைக்கும் பொழுது பேச்சுத்திறன் அதிகரிக்கும். பால்மணி, அரணாக்கொடி போன்றவற்றையும் குழந்தைக்கு அணிவிப்பர். “அன்று இரவு பேச்சியம்மனுக்கு படையலிடுவர். கீரை, கொழுக்கட்டை, கருவாட்டுக் குழம்பு, களி, அசைவ உணவு (கோழி-பெட்டை), முட்டை போன்றவற்றை வைத்து சாமி கும்பிடுவர். அப்போது குழந்தையின் தாய்மாமன் வீட்டிலிருந்து வாங்கி வந்த தொட்டிலில் இட்டு பெயர் சூட்டுவர். இதனை வயதில் மூத்தவர் செய்வர். குழந்தைக்குப் பெயர் சூட்டும் பொழுது பேச்சியம்மனுக்கு செய்வதை செய்யாமல் இருந்தால் அம்மன் குழந்தையை சேட்டை செய்யும் என்ற அடிப்படையில் சிறுதெய்வ வழிபாடு செய்வதாக பெரும்பண்ணையூர் கிராமம் இலந்தவனஞ்சேரி தெருவைச் சேர்ந்த சுமதி கூறுகிறார்.”

**முடிவுரை**

இந்துமதத்தின் கூறுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் தனக்கெனத் தனித்த — மரபு வழிப்பட்ட — தோற்றக் கதைகளையும் வழிபாட்டிடங்களையும் வழிபாட்டு முறைகளையும் வழிபடுவோரையுமுடைய சிறுதெய்வ வழிபாடுகள் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகளாக மரபுவழியாகத் தொடர்ந்து வரும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் இவையெல்லாம் மக்களிடையே புதிய புதிய தெய்வங்களைத் தோற்றுவிக்கின்றன. அத்தெய்வங்களிடம் பணிந்து வேண்டுதல் வாயிலாக — அத்தெய்வங்களுக்கு நன்மை செய்வதன் வாயிலாகத் — தான் நன்மையைப் பெற இயலும் என்று நம்புவதும் நன்மையைப் பெற்றுவிட்டதாக மகிழ்வதும் நாட்டுப்புற மக்களின் உளவியல் சார்ந்த செயல்களாக எண்ண முடிகின்றன.

**துணைநூற் பட்டியல்**


இராமநாதன், ஆறு. (க.ஆ.). "சிறு தெய்வ ஆய்வுமுறை: அறிமுகமும் தீப்பாய்ந்தம்மன் வழிபாட்டு ஆய்வும்.", ஆறு.இராமநாதன், *நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1991: 271-377.

சக்திவேல், சு. *திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறவியல் அளவாய்வு.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 2007.

பாலசுப்பிரமணியன், தெ. (மு.ப.ஆ.). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 15.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 2009.

முத்துச்சண்முகம். *தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்.* மதுரை: முத்துப் பதிப்பகம், 1978.

முருகன், வெ. (ப.ஆ.). *பால்ஸ் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி.* சென்னை: பழனியப்பா பிரதர்ஸ், 2 ஆம் பதிப்பு, 2015:491.

வேலுசாமி, ம. (க.ஆ.). "சிறுதெய்வ ஆய்வில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறையியல்", ஆறு.இராமநாதன், *நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1991: 247-272.


## *References*


*Ramanathan, Aaru. (Article Author). "Siru Theiva Aaiyvumurai: Arimukhamum Theepaaynthamman Vazhipaadu Aaiyvum.", Aaru. Ramanathan,* ***Nattuppuraviyal Aaiyvu Muraigal****. Thanjavur: Tamil University, Reprint, 1991: 271-377.*

*Sakthivel, Su.* ***Thirunelveli Mavatta Nattuppuraviyal Alavaaiyvu****. Thanjavur: Tamil University, Reprint, 2007.*

*Balasubramanian, Te. (1st Editor).* ***Vaazhviviyar Kalanjiyam Volume 15****. Thanjavur: Tamil University, 2009.*

Muthusanmugam. ***Tamil Ilakkiya Kotpaadugal***. Madurai: Muthu Pathippagam, 1978.

Murugan, Ve. (Editor). Pauls ***Tamil-Tamil-Angila Akarathi***. Chennai: Pazhaniyappa Brothers, 2nd Edition, 2015: 491.

Velusami, Ma. (Article Author). "Sirutheiva Aaiyvil Merkollappadum Aaiyvu Muraiyiyal", Aaru.Ramanathan, ***Nattuppuraviyal Aaiyvu Muraigal***. Thanjavur: Tamil University, Reprint, 1991: 247-272.

**தகவலாளர் பட்டியல்**

| வ. எண் | தகவலாளி | வயது | சாதி | தொழில் | தெரு, ஊர்/ஊராட்சி | நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | புஷ்பராணி | 48 | பறையர் | விவசாயக்கூலி | செல்வம் தெரு, பெரும்பண்ணையூர் | 06.03.2024 |
| 2. | செங்கம்மாள் | 64 | படையாச்சி | விவசாயம் | குடியானத்தெரு, சிமிழி | 09.03.2024 |
| 3. | கோகிலா | 36 | பள்ளர் | விவசாயக்கூலி | மேலத்தெரு, புதுக்குடி | 12.03.2024 |
| 4. | கருப்பாயி | 56 | பறையர் | விவசாயக்கூலி | கீழத்தெரு, புதுக்குடி | 15.03.2024 |
| 5. | ஜெயலெட்சுமி | 48 | பறையர் | விவசாயக்கூலி | வடக்குத்தெரு, பெரும்பண்ணையூர் | 18.03.2024 |
| 6. | மாலதி | 43 | வேளாளர் | மண்பாண்டத் தொழில் | கொசத்தெரு, சிமிழி | 20.03.2024 |
| 7. | சிவசங்கம் | 62 | வேளாளர் | மண்பாண்டத் தொழில் | கொசத்தெரு, புதுக்குடி | 22.03.2024 |
| 8. | பானுமதி | 61 | வேளாளர் | மண்பாண்டத் தொழில் | திப்பணம்பேட்டை, புதுக்குடி | 25.03.2024 |
| 9. | சுமதி | 47 | படையாச்சி | விவசாயக்கூலி | குடியானத்தெரு, பெரும்பண்ணையூர் | 28.03.2024 |

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com